**தலைப்பு 334 - பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு **334** பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் அடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே மாதம் 31ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் மாதம் 20ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 இல் பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்கவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து

விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு பொருட்டு பயனுறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணப்படுகிறது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன், அம்முறைமையின் பயனுறுத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு மேற்கொண்டு அதற்கேற்ப முறைமையினை பயனுறுவாக பேணுவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன என,

(ஆ) முன்னைய ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

2023 திசெம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டுநெறிகள் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டியபோதிலும், அத்தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பமொன்று பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் ஆண்டினுள் நி.ஒ. 109 இன் கீழ் புத்தகத்திலிருந்து பதிவழித்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பாக கூற்றுக்களில் (இணைப்பு ii) நட்டம் மற்றும் சேத 02 நிகழ்வுகளுக்கு ஏற்புடையதாக ரூபா 137,000 பெறுமதி புத்தகத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தபோதிலும், | நிதி ஒழுங்குவிதி 109 இன் கீழ் புத்தகத்திலிருந்து பதிவழித்தல் தொடர்பாக கூற்றுக்களில் (இணைப்பு ii) நட்டத்தின்தன்மை என்னவென்று குறிப்பிடப்படவில்லை என்பதுடன் குறித்த சொத்துக்கள் தொலைந்தமையினால் ஏற்பட்ட நட்டமாக சரிசெய்யப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டுநெறிகள் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் வேண்டும். |

மேற்படி 02 நிகழ்வுகளின் நட்டத்தின்தன்மை என்னவென்று நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள இணைப்பு (ii) இல் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ). பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் பதிவேடுகள் திணைக்களத்தினால் பேணப்படவில்லை என மாதிரி கணக்காய்வு சோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பொறுப்புக்கள் பற்றிய பதிவேடு** | | |
| நிதி ஒழுங்குவிதி 214 பிரகாரம் பொறுப்புக்கள் பற்றிய பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதி 214 பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு பேணப்படவில்லை என்பதுடன், அது எக்செல் விரிவுத் தாளில் (Excel Spread Sheet) பேணப்படுகிறது என காட்டப்பட்டிருந்தது. | நிதி ஒழுங்குவிதி 214 பிரகாரம் பொறுப்புக்கள் பற்றிய பதிவேட்டினை பரீட்சிக்ககூடியவாறு பேணுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி ஒழுங்குவிதி 66/69 இன் கீழ் மீளாய்வாண்டில் 04 செலவின விடயங்கள் பொருட்டு ரூபா 64,160,000 நிதியேற்பாடு வகைமாற்றப்பட்டிருந்தபோதிலும், ஆண்டின் இறுதியில் அவ்வாறு மாற்றப்பட்ட 04 செலவு விடயங்களில் சேமிப்பு 23 | நிதி ஒழுங்குவிதிகள் 66/69 இன் கீழ் செலவின விடயங்களில் நிதியேற்பாடு சேமிப்பு பொருட்டு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமையினால், பயிற்சிக் கொடுப்பனவுகள் மட்டும் செலுத்தப்பட நேரிட்டமை, 2023/12/31ஆம் திகதியன்று திணைக்களத்தைக் கலைக்க முடிவெடுத்ததாலும், எதிர்பார்த்த செலவுகளைச் செய்யாமையினாலும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் கணிசமான எண்ணிக்கையினர் 2023 திசெம்பர் மாதத்தில் வேறு | உச்ச வினைத்திறனுடன் நிதியேற்பாடுகளை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் முதல் 49 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாலும் இந்த நிலைமை ஏற்பட்டதாகக் காட்டப்பட்டிருந்தது. | |
| (ஆ) | ரூபா 75,000 ஆன மீண்டுவரும் செலவு விடயத்திலும், ரூபா 3,000,000 ஆன மூலதன 02 செலவு விடயங்களிலும் முழுமையான நிதியேற்பாடு எஞ்சி இருந்தது. மீண்டுவரும் மற்றும் மூலதன 05 செலவு விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 93,585,000 ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 45,401,364 அதாவது 48 சதவீத நிதியேற்பாடு எஞ்சி இருந்தது. | தொடர்ந்தியங்கும் எனும் எடுகோளின் அடிப்படையில மூலதனச் செலவினங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டாலும், 2023/08/31 ஆம் திகதியன்று திணைக்களத்தை கலைப்பதற்கும், 2023/12/31 ஆம் திகதிவரை கொண்டுநடத்துவதற்கும் எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக இரண்டு மூலதனச் செலவு விடயங்களின் நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் கணிசமான எண்ணிக்கையினர் இறுதி காலாண்டினுள் பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்றமையினாலும் செய்ததாலும், 2023/01/27 திகதிய 01/2023 பாதீட்டு சுற்றறிக்கையின்படி செலவின முகாமைத்துவம் காரணமாகவும், உள்ளூர் பிரயாணச் செலவுகள், மேலதிக நேரம் மற்றும் செலவு விடயங்களில் மிகைகள் தோன்றின எனவும் காட்டப்பட்டிருந்தது. | வருடாந்த நிதியேற்பாடுகளை உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின / கணக்கீட்டு உத்தியோகத்தர் செய்யவேண்டிய உறுதிப்பாடு

**2018** ஆம் ஆண்டின் **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் **38** ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயம் தொடர்பாக உறுதிப்பாடு செய்ய வேண்டியபோதிலும், அதன்படி செயலாற்றியிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து பேணப்படுகிறது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு | **2018** ஆம் ஆண்டின் **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் **38** ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள | **2018** ஆம் ஆண்டின் **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் **38** ஆம் பிரிவின் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் உறுதிப்பாடு செய்ய வேண்டியதுடன், அந்த முறைமையின் பயனுறுத்தன்மை பற்றி அவ்வப்போது மீளாய்வுசெய்து அதற்கிணங்க முறைமையை பயனுறு விதத்தில் பேணுவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும் எனவும், அந்த மீளாய்வுகளை எழுத்துமூலமாக செய்து அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்க வேண்டியபோதிலும், அத்தகைய மீளாய்வுகள் செய்யப்பட்டமைக்கான கூற்று அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து பேணி, அதுபற்றி அவ்வப்போது மீளாய்வுசெய்து அதற்கிணங்க முறைமையை பயனுறு விதத்தில் பேணுவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்தபோதிலும், அந்த மீளாய்வு எழுத்துமூலமாக செய்யப்படவில்லை எனக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்துகொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிற்சியாளர்களில், முதல் கட்டத்தின் கீழ் 31,463 பேரும், இரண்டாம் கட்டத்தின் கீழ் 3,264 பேரும் என்றவாறு மொத்தம் 34,727 பேர் இறுதிப் பயிற்சி பெற்றனர் என்பதுடன், இதற்காக மொத்தம் ரூபா 114,008,194 தொகை செலுத்தப்பட்டதெனினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் நியமிக்கப்பட்ட பலநோக்கு உதவியாளர்களின் எண்ணிக்கையினர் 23,024 மாத்திரமாக இருந்தது | பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையிலுள்ள அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு மீளாய்வுக் குழு, நிறுவனங்களின் ஆரம்ப தர வெற்றிடங்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் நிதியேற்பாட்டு அளவு, சம்பளம் செலுத்தும் திறன் போன்றவற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டதுடன், அதன்படி 2023.12.31 ஆம் திகதியளவில் நியமனம் வழங்கப்பட்ட சதவீதம் நூற்றுக்கு 80 எனக் காட்டப்பட்டிருந்தது. | பல்நோக்கு உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும், நியமனம் இன்றி நேர்முகப் பரீட்சை கட்டத்திலுள்ள உதவியாளர்களின் எண்ணிக்கையினர் 3,178 பேர் ஆகவும், நியமனம்/ பெயரிடப்படவுள்ள உதவியாளர்களின் எண்ணிக்கையினர் 3,207 பேர் ஆகவும் இருந்தது. | 2023.12.31 ஆம் திகதியளவில் அரசாங்க நிறுவனங்கள் பொருட்டு ஆட்சேர்ப்புக்காக அனுப்பப்பட்டிருப்பினும், பல்வேறு நிறுவனங்களின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளிலுள்ள முரண்பாடுகள், தேர்வுகளை நடத்துவதில் காலதாமதம், நேர்முகப் பரீட்சை முடிவுகளை வழங்குவதில் தாமதம், ஆரம்ப தர புதிய பதவிகளுக்கு அனுமதி பெறுவதில் காலதாமதம் போன்ற காரணங்களினாலும், சில உதவியாளர்கள் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளாத காரணங்களினாலும் இந்த எண்ணிக்கையினர் எஞ்சியுள்ளனர் எனக் காட்டப்பட்டிருந்தது. | நேர்முகப் பரீட்சை கட்டத்தில் உள்ள அத்துடன் நியமனம்/ பெயரிடப்படவுள்ள உதவியாளர்கள் பொருட்டு உரிய பணிகளை முடித்து, நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் நிரந்தர நியமனம் பெறாத மற்றும் NVQ சான்றிதழ் பெறாத 41 பல்நோக்கு உதவியாளர்கள் இருந்தனர். | தேசிய தொழில் தகுதிகள் (NVQ3) சித்தியடையாமை, உரிய திகதியில் பரீட்சைக்கு தோற்றாமை, பரீட்சைக்கு பதிவுசெய்த தனிப்பட்ட தகவல்களில் முரண்பாடுகள் போன்ற காரணங்களால் NVQ3 சான்றிதழ்கள் கிடைத்திருக்கவில்லை எனக் காட்டப்பட்டிருந்தது. | NVQ3 சான்றிதழைப் பெறாதவர்கள், அதைப் பெறாததற்கான காரணங்களைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய வேண்டும். |
| (ஈ) | ஆட்சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களில் 8,841 பேர் பல்வேறு காரணங்களின் நிமித்தம் பதவி விலகியுள்ளனர் என்பதுடன், இந்த எண்ணிக்கையினர் மொத்த ஆட்சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களில் 23 சதவீதமாக இருந்தது. | பல்வேறு ஒழுக்க மீறல்கள், நீதிமன்ற நடவடிக்கைகளால் குற்றவாளியாதல், அறிவித்தலின்றி சேவைக்கு வருகைதராமை, வெளிநாடு செல்லல், மரணம் போன்ற காரணங்களால் 2023.12.31 ஆம் திகதியளவில் 8841 பயிற்சியாளர்கள் திணைக்களத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பயிற்சியாளர்கள் நீங்குவதற்கு தாக்கம் செலுத்திய காரணங்களைக் கண்டறிந்து நிவாரணம் வழங்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க அலுவலர்களின் முற்பண "பீ" கணக்கில், அலுவலர்களின் இறப்பு மற்றும் | இறந்த அலுவலரின் ரூபா 250,000 கடன் தொகை பொருட்டு கடன் | நிலுவை கடன் மீதியை உடனடியாக |

| | | |
|---|---|---|
| பதவி விலகல் ஆகிய காரணங்கள் நிமித்தம் தற்போது சேவையில் இல்லாத ஊழியர்களிடமிருந்து 2023.12.31 ஆம் திகதியளவில் அறவிட வேண்டிய ஒரு வருடத்துக்கு மேற்பட்ட மொத்தமாக ரூபா 346,480 நிலுவையில் உள்ளது. | காப்பீடு மூலம் ரூபா 220,000 கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கும், பதவியை விட்டு வெளியேறிய அபிவிருத்தி அலுவலரின் கடன் மீதியான ரூபா 126,480 தொகை பிணையாளரிடம் இருந்து அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென காட்டப்பட்டிருந்தது. | அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023.12.31 ஆம் திகதியளவில், நிறுவனத்திற்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டு இதுவரை நிரந்தர சேவைக்கு ஆட்சேர்க்கப்படாத பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை 6,385 ஆக இருந்தது. | 2023.12.31 ஆம் திகதியளவில் அரச நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பெயரிடல்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனங்களில் நேர்முகப் பரீட்சை நடத்துவதில் ஏற்பட்ட தாமதம், மற்றும் பெறுபேறுகளை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நிரந்தர நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதென காட்டப்பட்டிருந்தது. | இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாத பல்நோக்கு உதவியாளர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |